செம்பதாகை

மலர்: 5
இதழ்: 2
மாசி 1983
விலை ரூபா 1-00
புரட்சிகர வெகுஜன ஏடு

தோல்வியை மறைக்க இடைத்தேர்தல் நாடகம்!

ஒரு நாட்டின் அரசியல் சாசனத்தில் காலத்திற்குக் காலம் திருத்தங்கள் கொண்டு வரப்படுவது புதுமையான ஒரு விடயமல்ல. ஆனால் எந்தச் சூழ்நிலையில், என்ன நோக்கத்திற்காக, யாருடைய அபிலாஷைகளின் அடிப்படையில் அத் திருத்தங்கள் கொண்டு வரப்படுகின்றன என்பதே முக்கிய பிரச்சினையாகும். அந்த வகையில் தற்போதைய அரசியல் சாசனமும் அதற்கு இதுவரை கொண்டுவந்த திருத்தங்களும் சுரண்டும் ஆளும் வர்க்கத்தினரின் தேவைகளுக்காகவே அன்றி ஏகப் பெரும்பான்மையான உழைக்கும் மக்களின் அபிலாஷைகளை எந்த வகையிலும் பிரதிபலிக்கவில்லை என்பதைக் காண முடியும்.

கலவரத்தைத் தொகுதிக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியுடன் முன்பு பதவி இழந்தவரையும் பிரதிநிதியாக இருக்கச் செய்வதற்கு வெட்கம் கெட்ட திருத்தம் ஒன்றை அரசு கொண்டுவந்த சம்பவத்தை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதிலும் பார்க்க கேலித்தனமான ஒரு திருத்தத்தையே தற்போது ஐந்தாவது அரசமைப்புத் திருத்தமாக அரசாங்கம் கொண்டு வந்துள்ளது. இத் திருத்தத்தின் படி ஆளும் கட்சி தனது விருப்பு வெறுப்புக்கு ஏற்றபடி இடைத்தேர்தல்கள் என்ற நாடகத்தை நடத்தி மக்களை ஏமாற்ற முடியும். ஒருதொகுதிக்கான பிரதிநித்துவம் காலியாகி ஒரு மாதத்திற்குள் அப் பிரதிநித்துவம் வகித்த கட்சியின் பொதுச் செயலாளர் புதிய உறுப்பினரின் நியமனத்தை தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்காது விட்டால் அத்தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்த வேண்டும் என்பதே ஐந்தாவது திருத்தத்தின் சாராம்சமாகும். இதன்படி ஒரு தொகுதியின் இடைத் தேர்தலை நடத்துவதா அல்லது இல்லையா என்று தீர்மானிப்பது ஒரு கட்சிப் பொதுச் செயலாளரின் தீர்மானத்திலேயே தங்கி உள்ளது. மக்களின் விருப்பு வெறுப்பு எதுவாக இருந்தாலும் அதைப் பற்றி ஆட்சிக்குக் கவலை கிடையாது.

உதாரணமாக அரசாங்கத்தின் ஒரு தொகுதிக்கு பிரதிநிதி தேவைப்படும்போது அத்தொகுதியில் தமக்கு வெற்றிவாய்ப்பு இருந்தால் மட்டுமே இடைத் தேர்தலை நடத்த அக்கட்சி முன்வரும். மக்களின் அதிருப்தி எதிர்ப்புக் கூடி வெற்றி வாய்ப்பு இல்லாவிடின் அரசாங்கக் கட்சியின் பொதுச் செயலாளர் நியமனமூலம் அத்தொகுதிக்கு பிரதிநிதியைத் தெரிவு செய்து விடுவார். சுருங்கக் கூறின் ஆளும் கட்சியின் வசதிக்கும் தேவைக்கும் ஏற்ற விதத்திலேயே தற்போதைய ஐந்தாவது திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதை மற்றொரு ஜனநாயக நடவடிக்கையென அரச தரப்பினர் கூற முயன்றாலும் அதன் போலித்தனத்தையும் கண்துடைப்பையும் மக்கள் மிக இலகுவாக உணரக்கூடியதாகவே உள்ளது.

இத் திருத்தத்தின் மூலம் அரசாங்கம் ஏற்கனவே தோல்வி அடைந்த தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்தப் போகிறது இது மக்கள் தீர்ப்பை மீண்டும் பெறுவதற்கான அரிய சந்தர்ப்பம் என்றே ஆட்சியினர் கூறுகின்றனர். அப்படி என்றால் அதில் கூட நேர்மையானது கையிடப்படுகிறது. ஏற்கனவே தோல்வி அடைந்த நிதி அமைச்சர் நியமனத்தின் மூலம் தொகுதி மறுநியமனத்தப்பட்டுள்ளார்: இரண்டு அமைச்சர்சளான தேவநாயகம் இராஜரை ஆகிய இருவருக்கு விதி விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. ஏனெனில் அத் தொகுதிகளில் தேர்தல் இடம் பெற்றால், என்னதான் மோசடி ஊழல் செய்தாலும் அரசுக்கு வெற்றி கிடைக்காது என்பதை உணர்ந்ததாலேயே அவ் விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது.

தங்களுக்கு உதை கிடைக்காது என்ற நம்பிக்கையில் அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் திகதி உறுப்பினரின் நியமனத்தை தேர்தல் ஆணையாளருக்கு அறிவிக்காது விட்டால் அத்தொகுதிக்கு இடைத்தேர்தல் நடத்த வேண்டும் என்பதே ஐந்தாவது திருத்தத்தின் சாராம்சமாகும். இதன்படி ஒரு தொகுதியின் இடைத் தேர்தலை நடத்துவதா அல்லது இல்லையா என்று தீர்மானிப்பது ஒரு கட்சிப் பொதுச் செயலாளரின் தீர்மானத்திலேயே தங்கி உள்ளது. மக்களின் விருப்பு வெறுப்பு எதுவாக இருந்தாலும் அதைப் பற்றி ஆட்சிக்குக் கவலை கிடையாது.

உதாரணமாக அரசாங்கத்தின் ஒரு தொகுதிக்கு பிரதிநிதி தேவைப்படும்போது அத்தொகுதியில் தமக்கு வெற்றிவாய்ப்பு இருந்தால் மட்டுமே இடைத் தேர்தலை நடத்த அக்கட்சி முன்வரும். மக்களின் அதிருப்தி எதிர்ப்புக் கூடி வெற்றி வாய்ப்பு இல்லாவிடின் அரசாங்கக் கட்சியின் பொதுச் செயலாளர் நியமனமூலம் அத்தொகுதிக்கு பிரதிநிதியைத் தெரிவு செய்து விடுவார். சுருங்கக் கூறின் ஆளும் கட்சியின் வசதிக்கும் தேவைக்கும் ஏற்ற விதத்திலேயே தற்போதைய ஐந்தாவது திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதை மற்றொரு ஜனநாயக நடவடிக்கையென அரச தரப்பினர் கூற முயன்றாலும் அதன் போலித்தனத்தையும் கண்துடைப்பையும் மக்கள் மிக இலகுவாக உணரக்கூடியதாகவே உள்ளது.

இத் திருத்தத்தின் மூலம் அரசாங்கம் ஏற்கனவே தோல்வி அடைந்த தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடத்தப் போகிறது இது மக்கள் தீர்ப்பை மீண்டும் பெறுவதற்கான அரிய சந்தர்ப்பம் என்றே ஆட்சியினர் கூறுகின்றனர். அப்படி என்றால் அதில் கூட நேர்மையானது கையிடப்படுகிறது. ஏற்கனவே தோல்வி அடைந்த நிதி அமைச்சர் நியமனத்தின் மூலம் தொகுதி மறுநியமனத்தப்பட்டுள்ளார்: இரண்டு அமைச்சர்சளான தேவநாயகம் இராஜரை ஆகிய இருவருக்கு விதி விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. ஏனெனில் அத் தொகுதிகளில் தேர்தல் இடம் பெற்றால், என்னதான் மோசடி ஊழல் செய்தாலும் அரசுக்கு வெற்றி கிடைக்காது என்பதை உணர்ந்ததாலேயே அவ் விதிவிலக்கு வழங்கப்பட்டுள்ளது.

தங்களுக்கு உதை கிடைக்காது என்ற நம்பிக்கையில் அரசாங்கக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் திகதி

இடாத இராஜினாமாக் கடிதங்களை மிகப் பணிவன்புடன் ஜே. ஆரிடம் சமர்ப்பித்தனர். அவர்களில் ஒரு சிலருக்கு எதிர்பாராத அடி விழ்ந்து விட்டது. அவர்கள் எல்லாம் இன்று அரசுக்கு எதிராகக் கலகக் கொடி தூக்கத் தயாராகி விட்டனர். அரசாங்கத்தின் உள்ளே பல அதிருப்திக் குரல்கள் கேட்க ஆரம்பித்து விட்டன. அவை அம்பலத்திற்கு வருவதற்கு அதிக நாட்கள் ஆக மாட்டா. அதே போல் நாட்டு மக்கள் மத்தியில் யூ. என். பியின் தோற்றம் நாளுக்கு நாள் வெளிச்சமாகி வருகிறது. விரைவில் யூ. என். பியை கண்மூடித்தனமாக ஆதரித்தவர்களே அதற்கு எதிராகக் கிளர்ந்தெழும் நிலைக்கு வருவார்கள். இவற்றை எல்லாம் இடைத் தேர்தல் நாடகத்தின் மூலம் மூடி மறைத்துவிடவே அரசு முனைந்துள்ளது. என்னதான் வித்தை காட்டினாலும் அரசுக்கு எதிராக வளர்ந்துவரும் மக்களின் குமுறல்களை அடக்கி விட முடியாது. ★

வட்டுக்கோட்டை இழுபறியில் அமிருக்கு வெற்றி!

வட்டுக்கோட்டைத் தொகுதிக்கு எம்.பி.யை நியமிப்பதில் கூட்டணிக்குள் ஒரு கயிறுழுவைப் போட்டி இடம்பெற்றது. நீலனை அன்றி கரிகாலனை என்ற இழுவையில் அமிர் நீலனின் பக்கமும், சிவசிதம்பரம் கரிகாலனின் பக்கமும் நின்றனர். ஆணையிடும் அதிகாரம் அமிரின் பக்கத்தில் இருந்ததாலும், வேறும் பல காரணங்களாலும் நீலன் எம். பி. யாகிவிட்டார். நீலனை நியமிப்பதில் அமிருக்கும் அவரது சகாக்களுக்கும் பலவழிகளில் நன்மைகள் உண்டு. அரசு-கூட்டணிப் பேச்சுவார்த்தைகளில் நீலன் தரகர்களில் ஒருவராக இருந்து வந்தார். அத்துடன் நீலன் ஜே.ஆர். போன்ற யூ. என். பி. தலைவர்களின் நெருக்கமான விசுவாசத்தையும், வர்க்க உறவையும் கொண்டவர். பாராளுமன்றத்திலும், பத்திரிகைகளிலும் கூட்டங்களிலும் அமிர் அரசைத் தாக்கிப் பேசினாலும், ஜே.ஆரோடு உள்ளார்ந்தவிடயங்களைப் பேசுவதற்கு நீலன் மிகவும் அவசியமானவர். இதை நன்குணர்ந்தே நீலனை தனது சொந்தத் தொகுதிக்கு எம்.பி.ஆக்கியுள்ளார் அமிர்.

நீலன் கரிகாலன் ஆகியோரின் தரதரக்கள் (சாதி சமூக அந்தஸ்து) பாவும் அவ்வப்போது ஆராயப்பட்டதாம். இதில் கூட்டணியின் வர்க்க அந்தஸ்திற்கு ஏற்றவர் நீலன் என்பதே அமிர் பக்க அபிப்பிராயம்: சாதி சமூக அந்தஸ்து விடயத்தில் அமிர் போன்ற வர்களுக்கு அதை ''.....கையாலும் காட்டேலாது, வாயாலும் சொல்லேலாது''. என்ற நிலையில் சுற்றிவளைத்து கரிகாலனைத் தட்டி நீலனை எம். பி. யாக்கி விட்டனர் என்றே பரவலாகப் பேசப் படுகிறது. ★

வரவு-செலவுத் திட்டத்திற்கு முன்பே வரிவிதிப்பும்! விலையேற்றமும்!

முன்னைய நாட்களில் வரவு-செலவுத்திட்டம் சமர்ப்பிக்கும் தினத்திலேயே துண்டு விழும் தொகையைச் சரிப்படுத்துவதற்கான யோசனைகளை நிதியமைச்சர் தெரிவிப்பார். இப்போது எதற்கெடுத்தாலும் பிரத்தியேக வர்த்தமானப் பத்திரிகை மூலம் நள்ளிரவில் எத்தனையோ நடவடிக்கைகள் அறிவிக்கப்படுவது வழக்கமாகி விட்டது. இப்போது வரவு-செலவுத்திட்ட உரையென்பது வெறும் சம்பிரதாயபூர்வமானது மட்டுமேயன்றி வேறு எதுவுமில்லை.

இந்தத் தடவை புதிய நடைமுறையிலும் கூட சிறிது 'முன்னேற்றம்' கண்டுள்ளனர். மதிப்பீடு சமர்ப்பிப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே விற்பனவுவரியதிகரிப்பு பெப்ரவரி 19-ம் திகதியிலிருந்து அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இரகசியங்கள் மன்கூட்டிப் வர்த்தகப் பிரமுகர்களுக்கு தெரிய வருவதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனக் கூறும்போது எவ்வளவு தூரம் பொறுப்பு வாய்ந்த தலைவர்கள் எனப் பட்டவர்கள் நடந்துகொள்ளுகிறார்கள் என்பதை உணரக் கூடியதாயிருக்கிறது. சென்ற தடவை வரவு-செலவுத்திட்ட இரகசியம் வெளியானதால் உபாலி விஜயவர்தனை மூன்று மூன்று கோடி ரூபா சம்பாதித்தார் என நிதி அமைச்சர் தெரிவித்திருந்தார். மந்திரிகள் இரகசியம் வெளிவந்ததற்கு பொறுப்பாளர்கள் யார்? அது கண்டுபிடிக்கப்பட்டதா? உபாலிக்கு மூன்று கோடி ரூபாய் இலாபம் என்றால், நாட்டுக்கு மூன்றுகோடி ரூபாய் நட்டம் என்பது பொருள்பட வில்லையா?

பொதுவில் சகல விற்பனைக்கும் 2 வீதம் ஆகவிருந்த விற்பனவு வரி 4 வீதம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது. காலாண்டுக்கு 25,000 ரூபா விற்பனை செய்யும் ஒரு சிறு கடைக்காரர் (விற்பனவு வரி தவிர்ந்த பொருள்களின் விற்பனை இதற்குள் அடங்காது.) விற்பனவுவரி செலுத்த வேண்டும். அதாவது நாள் ஒன்றிற்கு ரூபா 320-ற்கு விற்பனை செய்யும் சிறுகடைக்காரர்களும் விற்பனைவரி செலுத்தவேண்டும். இன்று பொருட்கள் மீதும் விலையில் சாதாரண கடைச் சொத்தக்காரர் எனும் விற்பனவு வரியாக 4 வீதம் செலுத்த வேண்டும். வேறு வர்த்தகர்களில் சொன்னால் நுகர்வோர்களின் மீது இந்தவரி சுமத்தப்படவுள்ளது சுருக்கமாகச் சொன்னால் பொருட்களின் விலை படிப்படியாக உயரப் போகிறது.

மாவிற்கு விற்பனவு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது ஆனால் மாவினால் தயாரிக்கப் படும் பணிசுக்கும், வேறு உணவு வகைகளுக்கு விற்பனவு வரி உண்டு. அரிசிக்கு விற்பனவு வரியில்லை என்ற போதிலும் சோற்றிற்கும் அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் சகல உணவுப் பண்டங்களுக்கும் விற்பனவுவரி உண்டு. இதனால் இவற்றின் விலை அதிகரிக்கும்.

சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன் ஒரு அமெரிக்க டொலர் 18-50 ஆகவிருந்தது. அது இன்று 23-00 ஆகி விட்டது. எமது நாணயம் பெருமளவில் மதிப்பிறக்கம் செய்யப்பட்டுள்ளதையே இது குறிக்கிறது. அதிகரித்த செலவுகள் காரணமாக மீண்டும் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்படவுள்ளன. கட்டணசபை (Fares Board) சிபார்சின்படியே கட்டணம் அதிகரிக்கப் படவுள்ளது. இத்தகைய வரிச் சுமையையும் விலை அதிகரிப்பையும் மக்கள்மீது சுமத்தவே வரவுசெலவுத் திட்டம் தேர்தல்களுக்குப் பின்பு கொண்டு வரப்பட்டுள்ளது என்பது புலப்படுகிறது. ★

ஜே.ஆரின் தார்மீக ஜனநாயகம்!

முதலாளித்துவப் பாராளுமன்றத் தேர்தல்கள் பலவிதம் என்பதை நாம் அன்மைக் காலத்தில் அனுபவ மூலம் அறிந்துள்ளோம். அவையாவுமே மக்களை ஏமாற்றித் திசை திருப்பும் நோக்கில் ஒருவித அடிப்படை ஒற்றுமை உடையன என்பதையும் காண முடிகிறது. அது ஏமாற்றுவதிலும் அணுப் புவதிலும் வெட்கங் கெட்ட தனத்துக்கு எல்லை இல்லை என்பதை நமக்கு எடுத்துக்காட்டியதில் ஜே. ஆர். ஆட்சிக்கு நிகராக எதுவுமே இல்லை.

சர்வஜன வாக்கெடுப்பின் மோசடியை மக்கள் சரியாக இனங்கண்டு விட்டார்கள் என்பதையும் சர்வதேச ரீதியில் மாரையுமே இந்த 'வெற்றி' ஏமாற்றவில்லை என்பதையும் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் நன்கு அறிவர். எனவே தான் தோல்வியடைந்த தொகுதிகளில் மறு தேர்தல் நடத்துகிறார்கள். அப்படியானால் உண்மையில் மற்றத் தொகுதிகளில் வெற்றியடைந்தார்களா? அந்தப் பொய்யைப் பூசி மழுப்பவே இப்போது தேர்தல்கள் நடக்கின்றன.

அப்படியே அவர்கள் தோல்வியடைந்த தொகுதிகளில் தேர்தல்கள் நடத்துவதாலும் கூட மட்டக்களப்பு கல்முடா போன்ற தொகுதிகளுக்கு என்ன நடந்தது! என்ன அடிப்படையில்தானி டி மெல்லின் பாராளுமன்றத் தொகுதியை மாற்றினார்கள்? இதெல்லாம் நமக்கு வியப்பளிக்கும் விஷயங்கள் அல்ல.

ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடிப்பதில் ஜே. ஆர். சூரர். (மற்றவர்கள் கையை இறுகக் கட்டிவிட்டு குதிரைச் சண்டை போடுவதிலும் அவர் சூரர்தான்.) இம்முறை போகிற போக்கில் வட்டுக்கோட்டைத் தொகுதியில் கூட தேர்தலுக்கு ஏற்பாடு செய்து விட்டார் அல்லவா?

தமிழில் 'திருடனுக்குத் தேள் கொட்டின மாதிரி' என்று உள்ளது போல, பாறைமேல் மலம்களித்த பூனை மாதிரி' என்று ஒரு சிங்களப் பழமொழி உண்டு. தளர்பதியார் ஞாபகம் வரவில்லையா?

★

சிவராத்திரி அரசின் கையில்!

சிவராத்திரி பெப்ரவரி 11ம் திகதி என்று சொன்னார்கள். அரசாங்கம் அன்று விடுமுறை என்றும் பிரகடனம் செய்தது. திடீரெனென்று ஒரு தமிழ் அமைச்சர் அதெல்லாம் இல்லை மார்ச் 11 தானதி தான் என்கிறார். கூட்டணித் தலைவர்களது குரலையும் காணோம். சிவராத்திரி, தேர்தல்களைப்போல, பிரி போடப் பட்டுள்ளது.

சிவராத்திரி எப்போது என்று தீர்மானிக்கிற உரிமை யாருடையது? பஞ்சாங்கம் கணிக்கிற சாத்திரி யாருடையதா? அவர்களுள் ஆயிரம் வேறுபட்டால் அதைக் கூட எப்படியோ ஒருமாதிரி பேசித் தீர்த்துக்கொள்கிறார்கள். கணங்களுக்கு என்னவோ நப்பிசகை இருக்கிறது. ஏதோ மரபு என்று எதையோ எப்படியோ செய்துவிட்டுப் போகிறார்கள். 'நம்புகிறவர்கள் மற்றவர்கள் முதுகில் ஏறிச் சவாரி செய்ய வழி காட்டாத எந்தச் சம்பிரதாயமும் இருந்துவிட்டுப் போகட்டும். ஆனால் சிவராத்திரி எப்போது என்று தீர்மானிக்க அமைச்சர் என்ன ஆஸ்தான ஜோசியரா, அல்லது அரசாங்கத்தின் பிரதம பூசாரியா? என்று கேட்கதோன்றுகிறது. அவர் அமைச்சர். அரசுக்கு மேலே ஜனாதிபதியை விட பரும் இல்லை. அவர்கள் வேண்டுமானால் நத்தார் டிஸம்பர் 29-ம் திகதி என்பார்கள். ஆங்கிலப் புதுவருடம் ஜனவரி 27 என்பார்கள். தைப் பொங்கல் ஆவணி மாதம்தான் வரும் என்று தீர்மானிப்பார்கள். அவர்கள் வைப்பதுதான் சட்டம்! அதைக் கேட்க நீங்கள் யார். நான் யார்? அந்த உரிமையெல்லாம் போன முறையே பறிகொடுத்தாயிற்றே. இனியாவது புத்தசாலித்தனமாக எதிர்காலத்துக்கு உங்களைப் பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். 'நல்ல பிள்ளையாக' இருங்கள் - கூட்டணித் தலைவர்கள் மாதிரி. அடுத்தமுறை தான் மாவட்ட மந்திரிப் பதவி மாதிரி மிட்டாய் கிடைக்கும்.

★

சுதந்திர-ஜனநாயக சிராத்ததினம்

இலங்கையின் 35வது சுதந்திர ஞாபகார்த்ததினம் என்று ரூபவாகினியில் சொன்னார்கள். எவ்வளவு சத்தியமான வார்த்தை. ஞாபகார்த்ததினம்! ஆனால் 1978ம் ஆண்டு பெப்ரவரி 4-ந் திகதிதானே சுதந்திரம் இறுதியாக ஆழக் குழி தோண்டிப் புதைக்கப் பட்டது. ஆகவே இது 5வது ஞாபகார்த்ததினம் இல்லையா? இதற்கு 'இன்னுமொரு அழகான வார்த்தை உண்டு. சிராத்ததினம். அடுத்தவருடம் முதல் சுதந்திரத்துக்கும ஜனநாயகத்துக்கும் சேர்த்து சிராத்ததினம் கொண்டாடலாம். கோயில்களிலும் பள்ளிவாசல்களிலும், தேவாலயங்களிலும், விகாரைகளிலும் மரித்துப்போன நம் சுதந்திரத்தையும் பாராளுமன்ற ஜனநாயகத்தையும் நினைவு கூர்வோமாக. அவற்றின் ஆத்மா சாந்தி அடைவதாக.

★

கிலிபிடித்த ஆண்ட பரம்பரை

பேராசிரியர் கைலாசபதி உயிரோடு இருந்தபோது அவரை எதிர்த்த வீழ்ந்த பிற்போக்கு கூடாரங்களுள் தமிழ் ரசுக் கட்சிப் பிரச்சார இலக்கிய கூட்டமும் ஒன்று 'ஆண்ட பரம்பரை; போன்ற அர்த்தமற்ற உளறல்களை வைத்து தி. மு. க. பாணியில் உணர்ச்சிகரமான இலக்கிய வியாபாரம் பண்ணிய காசி ஆனந்தன் முதல் பத்தாம் பசலித்தனத்திற்கும் படுமோசமான ரசனைக்கும் பாலம் அமைக்கும் சுடர் பத்திரிகை வரைஉள்ள இலக்கியப் போலிகளைத் தோலுரித்ததில் கைலாசபதி அவர்களது வழிகாட்டலின பங்கு கணிசமானது. அவரது மரணம் பற்றிக் கிட்டத்தட்ட வெளிப்படையாகவே தன் மகிழ்ச்சியை வெளியிடும் ஒரு தூற்றல் கட்டுரையைச் சுடரின் 1983 இன் முதலாவது இதழ் தாங்கி வந்துள்ளது. ஆண்ட பரம்பரையின் மண்ட 'பண்பாடு' சுடர் விடுகிறது. அவரும் சண்க கைலாசபதியின் நினைவோன் றேபோதும் போலுள்ளது. இந்த வீரப் பரம்பரையின் நெஞ்சம் நடுங்க.

★

ஒரு அசட்டு பேதையின் ஆராய்வு

அண்மையில் யாழ் ளா கத்தில் ஒரு பிரபல இந்திய சரவாற்றுசிரியை இலங்கை யின் பிரிவினைப் பிரச்சினை பற்றிப் பேசிய சில கருத்துக்கள் சமகால உலக வரலாற்றின் அடிப்படையில் மிகவும் சரியா வைன்றே நினைக்கிறேன். அவ் வரலாற்றுசிரியருடன் யாரும் முற்றுக உடன்பட வேண்டி தில்லை, ஆனால் அவர் நமத் தியில் இல்லாத சூழ்நிலையில் விமர்சனம் செய்வோர் அதை தர்க்க ரீதியாகவும் தகவல்க ளின் அடிப்படையிலும் செய் வது நல்லது.

இன்றைய உலகின் நிலையை வைத்துப் பார்க்கும்போது இலங்கை உட்பட, எந்த நாட்டிலும் அந்நிய வல்லரசுகளது தலையீடின்றிப் பிரிவினை சாத்தியமில்லை என்று பேரா சிரியை ஒரு விரிவுரையில் கூறியதை மறுத்து ஒரு கற்றுக்குட்டிச் சரித்திர சமூகவியல் ஆராய்வாளரும், மேற்கு ஜேர்மன் பணத்தில் நடத்தப்படும் ஒரு ஆராய்வு நிறுவன உறுப்பினருமான ஒருவர் வாரப் பத்திரிகை ஒன்றில் எழுதியுள்ளார். பின்னவரது வாதங்கள் எதுவுமே சமகால வரலாற்றைத் தழுவி முன்வைக்கப்படவில்லை, போதாக் குறைக்கு சோவியத் யூனியனில் பிரிந்து போகும் உரிமை இருப்பதால் அங்கு சிறுபான்மைப் பிரச்சினை சுமுகமாகவே தீர்ந்து விட்டதாகவும் சீனாவில் பிரிந்துபோகும் உரிமை இல்லாததால் அங்கே சிறுபான்மைப் பிரச்சினை உக்கிரமாகி உள்ளதென்றும் உணரி வைத்திருக்கிறார். இந்த மாதிரிப் பிரகிருதிகள் இந்த உலகத்தில் தான இருக்கின்றன? தயவு செய்து யாராவது செம்பதாகையில் போன வருடப் பிற் பகுதியில் 'இராவணனின்' கட்டுரைய அந்த அசட்டு மேதைக்கு அனுப்பி வையுங்களேன்!

★

சம்பவங்களும் அதன் போக்குகளும்

அவதானி

சொந்தநாடும் சொந்த வீடும்

எஸ். ஜே. வி. செல்வநாயகத்துக்கு தமிழரசுக்கட்சிக்காரர்களை போட்ட ஈழத்துப் காந்தி வேஷத்தை அதிகம் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் அவரின் மகன் தந்தைக்கு வாரிசாகமுயன்று கொண்டிருக்கிறார். ஆனாலும் சூழ்நிலைகள் அதற்கு அவ்வளவு சாதகமாக இல்லை. அவர் உண்மையிலேயே ஈழம் வேண்டி நிற்பதாக நம்புபவர்களில் சிலர், த. வி. கூட்டணிக்குள்ளும், பலர் த. ஈ. வி. அ. உள்ளும் உள்ளனர் அதன் மூலம் அவரால் இரண்டு தொணிகளிலும் காய்களை நகர்த்தப் பாணம் செய்யமுடிகிறது.

அவரது சமீபகாலத் திருவிளையாடல் ஒன்று; அவர் தனக்கொரு வீடு கட்டுவதாக அறிக்கை. அதில் என்ன விழைவென்று கேட்கிறீர்களா? அதில் பிழையே இல்லை. நல்ல விஷயம்தான். ஆனாலும் கொழும்பில் அவ்வளவு வீடு கட்ட இருக்கிறது. கொள்ளுப்பிட்டியும் தமிழ் ஈழ எல்லைக்குள் வருகிறதா என்று யாராவது அவரிடம் கேட்டுச் சொல்லுங்களேன். தந்தைக்குத் தேயிலைத் தோட்டங்கள் இருக்கிறது உண்மை. ஆனாலும் கொழும்பில் சொந்தவீடு இல்லையே என்ற வாதம் தனி நாடு கேட்க முன்பே முன்வைக்கப்பட்டது இனி இதற்கென்ன சொல்லப் போகிறார்கள்.

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இருந்து போராடுகிறார்கள். நான் ஈழத்துக்கு அன்டைநாடான ஸ்ரீலங்காவிலிருந்துதானே போராடுகிறேனென்று நம் இளம் வழக்கறிஞர் நட்சத்திரம் பதில் தரலாம்,

இன்னும் எத்தனை காலம் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே?

★

சினிமா அரசியல்

இன்னுமொரு சினிமா நடிகர் முதலமைச்சராகிவிட்டார்! நேற்று எம்ஜீஆர் இன்று எம்டிஆர். எம். ஜீ. ராமச்சந்திரனுவது நீண்ட காலமாக தி.மு.க. அரசியலில் இருந்தது, சில காலம் கட்சிப் பொறுப்புகளிலிருந்து ஈடுபட்டுப் பிறகு பிரிந்து வேறுகட்சி தொடங்கி தேர்தலில் இறங்கினார். எம்.டி.ராமராவ் ஒரே ராவிலே அரசியல்வாதியாகி மறுநாளே முதலமைச்சராகி விட்டார். சாமி வேஷம் போட்டு நடிக்கிறாரே அல்லவா. அவருக்கு இந்தமாதிரி அற்புதங்களை எல்லாம் செய்ய முடியாமல் போகுமா?

இந்திராவின் சர்வாதிகாரத்தின் சரிவு மகிழ்ச்சிக்குரிய விஷயம்தான். இந்திராவின் ஆட்சியை இப்போதைக்கு அசற்ற முடியாது என்றாலும் ஆந்திரமும் கர்நாடகமும் இந்திராவை கோட்டைவிட்டன. இரண்டிலும் காரெத் தேர்தல் அவரது நிர்வாகத்தை நடவடிக்கைகளுக்கு ஒரு நல்ல உலுக்கல்! ஆனால் இந்தியாவில் இடதுசாரிகள் எந்தளவுக்கு இருக்கிறார்கள்? தத்துவ ரீதியான கொள்கைகளோ கோட்பாடுகளோ இல்லாமல் இந்திராவை முழுமையாக போக்கு காட்டிட முடியாமல் இருந்தது. 1977-1979 ஜனதா அரசாங்கத்தின் பாடங்களை இந்திய எதிர்க்கட்சிகள் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

சினிமா மோகத்தை வைத்து எம்.ஜீ.ஆர். அரசியல் பிழைப்பு நடத்துகிறது. ஆனால் தமிழ்நாட்டின் நிர்வாகம் குட்டிச்சுவராகிவருகிறது. ஆந்திராவுக்கு நம் அனுதாபங்களை இப்போதே தெரிவிக்கலாமா? வட இந்திய சினிமாக்காரர்களை அரசியல் பிரசாரத்தில் பயன்படுத்த நேரு குடும்பம் என்றுமே தயங்கியதில்லை. பம்பாய் சினிமாத்துறையின் ஆசிர்வாதம் அவர்களுக்கு நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. பாவம்! இப்போது தென்றலே காற்று வேறுதிசையில் வீசுகிறது. சினிமாநடிகனுக்கு அரசியல் இருப்பது தவறல்ல. ஆயினும் சினிமாவையும் அரசியலையும் பிரித்துப் பார்க்கத் தெரியாத பாமரத்தன்மையை மூலதனமாக்கி அரசியலிலே சினிமாக்காரர் மிகக் கேவலமானது.

இவ்வளவு காலமும் இந்திரா காந்தியின் காலச்சூழலில் வந்த இந்திய மாஸ்கோ தாசர்கள் இனி என்ன வேடம் போடுவார்களோ தெரியாது. மொஸ்கோவில் எழுதப்படும் இவர்களுடைய நாடகங்கள் இந்திராவிடம் எடுபடும் அளவு ஜனங்களிடம் எடுபடுவதில்லை. அந்த அளவில் இந்தியாவின் அரசியல் இன்னும் முற்றுமுழுதாகச் சீர்குலைந்து விடவில்லை!

★

அடுத்த இதழில்

'நம் சமுதாய மாற்றமும் சில புதிய கலை வடிவங்களும்'

இலக்கிய ஆய்வுக் கட்டுரை

நண்பர்

'ஜெ'

எழுதுகிறார்.

தோட்டத் தொழிலாளரைப் பாதிக்கும் மற்றுமொரு சட்டம் வருகிறது!

1948ல் சுதந்திரம் கொடுக்கப்பட்டதை அடுத்து கேடுகெட்ட குடியுரிமைச் சட்டங்களால் அடுத்தடுத்துவந்த அரசாங்கங்கள் தோட்டத் தொழிலாளருக்கு எதிராகத் தொடர்ச்சியான பாரபட்சம் காட்டி வந்துள்ளன. அதன் தொடர்ச்சியாக அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பணிக்கொடை மசோதா (Gratuities Bill) தோட்டத் தொழிலாளரைப் புறக்கணிக்கும் மேலும் ஒரு சட்டமாகும்.

ஐயவர்த்தனே அரசாங்கத்தில் எண்ணிக்கையினடிப்படையில் இரண்டு பெரிய தொழிற்சங்கங்களின் தலைவர்கள் மந்திரிகளாக இருக்கின்ற போதும்அடுத்தடுத்து இரண்டு தடவைகள் மிக அண்மைக் காலத்தில் சம்பளம் தொடர்பாகத் தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசுத்துறையைச்சேர்ந்த ஏனைய ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு சுமார் நூற்றி ஏழு ரூபாய் இரண்டு அடுத்தடுத்த வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தும் அந்த அதிகரிப்பு தோட்டத் தொழிலாளருக்கு இன்றுவரை மறுக்கப்பட்டுள்ளது.

ஏனைய அரசுத்துறை ஊழியர்களுக்கு வழங்கிய சம்பள அதிகரிப்பை தோட்டத் தொழிலாளருக்கும் வழங்க வேண்டுமெனகோரி இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், யூ.என்.பி. ஆதிக்கத்தில் உள்ள இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் தொழிற்சங்கம் இரண்டையும் தவிர்ந்த ஏனைய தொழிற்சங்கங்கள் இரண்டு அடையாள வேலை நிறுத்தத்தை மேற்கொண்டன.

தொழிற்சங்கங்களின் கூட்டுக் கமிட்டியினால் கடைசியாகத் தொடுத்த அடையாள வேலை நிறுத்தத்திற்கு இதொகாவும் யூஎன்பி பேச்சாளர்களும் உதவ மறுத்தது குறிப்பிடத்தக்கது. ரூ. 107/- சம்பளக் கோரிக்கையை முன்வைத்து நடந்த இந்த இயக்கத்தின்போது தங்கள் இரண்டு தொழிற்சங்கங்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையே இது தொடர்பாகச் சமரசப் பேச்சுவார்த்தை நடைபெறுவதாகக் கூறினர்.

ரூபா 107/-சம்பளஉயர்வு சம்பந்தமாக பேச்சுவார்த்தைகள் ஏதாவது இடம் பெற்றதா என்பதையிட்டு தோட்டத் தொழிலாளர் மத்தியில் ஏற்கனவே சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ரூபா 107/- சம்பள உயர்வுகோரி இடம்பெற்ற கடைசி அடையாள வேலை நிறுத்தத்தை முறியடிக்கும் ஒரு சதியாகவே இந்த இரண்டு தொழிற்சங்கங்களும் பேச்சுவார்த்தை என்ற கதையைப் பரப்பின எனத் தொழிலாளர்கள் நம்புகின்றனர்.

மரத்தால் விழுந்தவனே மாடு ஏறி மிதித்ததுபோல அரசாங்கம் அறிவித்த பணிக்கொடை மசோதா தோட்டத் தொழிலாளரை மாற்றாந்தாய் போக்கில் நடத்துவதையே காட்டுகிறது ஜனதிபதி, அபிப்பிராய வாக்கு கணிப்பு தேர்தல்களை அரசாங்கம் எதிர்நோக்கியபோது தொழிலாள வர்க்கத்திற்கு இது ஒரு பெரும் சலுகை என வானளாவப் புகழப்பட்டது.

பெரும்பாலான தோட்டத்தொழிலாளர்கள் இந்த பணிக்கொடை மசோதாவினால் தாம் பெரு நன்மையடைவப் போவதாக நம்பினர். ஆனால் உண்மை அதுவல்ல. ஏழு இலட்சம் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகப் பாரபட்சமான முறையில் அதன் விதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன. பணிக்கொடை கணிப்பு தோட்டத் தொழிலாளருக்கு ஒரு அடிப்படையிலும் கைத்தொழில் துறையில் உள்ள தொழிளாளருக்கு மிகவும் சாதகமான முறையில் வேறு ஒரு அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுளது.

கைத் தொழில் துறையைச் சேர்ந்த தொழிலாளருக்கு கடைசியாகப் பெற்ற சம்பளத்தின் அடிப்படையில் முழுக்காலப் பகுதிக்கும் ஒரு வருடத்திற்கு அரைமாதச் சம்பளம் என்ற அடிப்படையில் பணக்கொடை அமையும் தோட்டத்தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் 1959ம் ஆண்டு நவம்பர் மாதம் பெற்ற சம்பளத்தின் அடிப்படையில் அமையும்.

கடந்த 24 வருட்ங்களிலும் பெற்ற பல சம்பள உயர்வுகளைக் கொண்ட இன்றைய சம்பளத்திற்கும் 1959ல் நிலவிய சம்பளத்திற்குமிடையே உள்ள பெரிய இடைவெளி ஒரு விசித்திரமான நிலைக்கு கொண்டு செல்லும்.

தோட்டத் தொழிலாளருக்கு பாரபட்சமான முறையில் மேலும் மசோதா ஏற்பாடு செய்கிறது. கைத்தொழிற் துறையைச் சேர்ந்த தொழிளாளர்கள் தமது சேவைக்காலம் முழுவதற்கும் ஒவ்வொரு வருட சேவைக்கும் அரைமாதச் சம்பளம் என்ற அடிப்படையில் பணிக்கொடை பெற வழிசெய்யப்பட்டுள்ள வேளை தோட்டத் தொழிலாளருக்கு, ஊழியர் சேமலாபநிதி பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட காலத்திற்கு ஒரு வருடத்திற்கு ஏழு நாள் சம்பளத்தை மட்டுமே பணிக்கொடையாகப் பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அன்று சிவனுலட்சுமணன் இன்று ராஜா ஜெயமணி நாளை யாரோ?

பட்ட போராட்டத்தின் இறுதியில் தோட்டத்தொழிலாளர்கட்கும் துரைக்குமிடையில் கைகலப்பும் ஏற்பட்டது. இதில் தோட்டத்துரையின் காட்டுமிராண்டித்தனத்தினால் திரு ராஜா ஜெயமணி என்ற இளைஞன் கொல்லப்பட்டதுடன், ஒரு பெண் கடுங்காயத்திற்கும் உட்பட்டார். பலபேர் தாக்கப்பட்டார்கள். மேலும் அப்பகுதி பொலிசாரினால் பாரபட்சமாக தொழிலாளர்கள் தாக்கப்பட்டதும் பலியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

தோட்டத் துரைகளால் தொழிலாளர்கள் கொல்லப்படுவது யூ.என்.பீ. ஆட்சியில்

(6-ம் பக்கம் பார்க்க)

தோட்டங்களில் நிர்வாகச் சீர்கேடுகள் மேலோங்கியுள்ளது. தோட்ட நிர்வாகத்தினர் - குறிப்பாக தோட்டத் துரைகளின் 'சம்பாதிக்கும் பாதையிலான' சுரண்டலில் 'தலைமூப்புத்தனமும், தான்தோன்றித்தனமும் தலைவிரித்தாடுகிறது. இதனால் இன்று பல தோட்டங்களில் ஏற்கனவே தொழிலாளர்கள் அனுபவித்துவந்த குறைந்தபட்ச 8-மணி நேர வேலை தொடங்கி தொழிற்சங்க உரிமைகள் மற்றும் நாளாந்த சலுகைகள் எல்லாவற்றையும் பறித்தெடுத்து கொடூரமான அடக்குமுறைகளை தோட்டத் துரைமார்கள் நிலைநாட்டிவருகிறார்கள். இதை எதிர்த்து பல போராட்டங்கள் மலையகத்தில் ஆங்காங்கு வெடித்து வெளிக்கிளம்பிக் கொண்டிருக்கின்றன.

இதன் பிரதிபலிப்பே அக்கரைப்பத்தனை அலடோரி தோட்டத்தில் அண்மையில் நடைபெற்ற போராட்டங்களும் அதன் விளைவுகளுமாகும். அங்கு குறிப்பிட்ட துரையின் வருகைக்குப் பின் ஒரு வருட காலத்திற்குள் கடுமையாக அடக்கி ஒடுக்கப்பட்டு மிருகங்களிலும் கேவலமாக நடாத்தப்பட்ட தொழிலாளர்களால் சுமார் 15க்கு மேற்பட்ட வேலை நிறுத்தப் போராட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. இதற்கான தொழிற்சங்க தீர்வுகள் 'கொடைபரண்களில்' மட்டுமே தீர்க்கப்பட்டன. நடைமுறையில் எதுவித மாற்றமுமின்றி அடக்குமுறை நாளுக்கு நாள் கூடிக்கொண்டிருந்தது.

இதற்கெல்லாம் முடிவு கட்டும் விதமாக ஒரு சில வாரங்கட்கு முன் நடத்தப்

3-ம் பக்கத் தொடர்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு.....

கள் விஷயத்தில் இங்கேயே கொள்ளலாபம் சம்பாதிக்க அனுமதிக்கப்பட்டுள்ளதால் பிரச்னை சற்றுக் குறைவாக உள்ளது). இவையெல்லாம் தேசிய அபிவிருத்தித் திட்டங்களைப் பல வகையிலும் பாதிக்கின்றன. மனபெல்லாம் வெளி நாடுகளிலிருந்து பெரும் தொகையான செலவில் 'நிபுணர்கள்' அழைக்கப்படுவதை இங்குள்ள தொழில்நுட்பவல்லுனர்கள் எதிர்ப்பார்கள். இப்போது ஆட்குறைப்பு என்ற காரணத்தைக்காட்டி முழு வேலைகளையும் அப்படியே அந்நியக் கம்பெனிகட்குக் கொடுக்க முடிந்துவிடுகிறது. இதைப் பற்றிக் கவலைப்படும் மனநிலையில் இன்றைய அரசாங்கம் இல்லை. இந்நிலவரம் மேலும் தில்லுமுல்லுகளுக்கு வசதி செய்வதையிட்டு மகிழக்கூடிய நிலையில் கூடப் பலபேர் இருக்கிறார்கள். (சிங்கப்பூரிலும் ஸுரிச்சிலும் பணம் சேர்ப்பவர்களுக்கு நாடு எக்கேடு கெட்டால் என்ன?)

இங்கே உழைத்து ஆயுட்காலத்திற்கூடச் சேமிக்க முடியாத பணத்தை ஒரு வருடம் அல்லது சில மாதங்களிலே திரட்டிவிடலாம் என்ற எண்ணம் இங்கேயே வேலை தேடும் நோக்கத்தை அமுக்கி விடுகிறது. இளைஞர்கள் பலர் எப்போது வெளியே வேலை வாய்ப்பு வரும் என்று காத்துநிற்கவும் கண்முன் தெரியும் வேலைவாய்ப்புக்களையும் சமுதாயத் தேவைகளையும் உதாசீனம் செய்யவும் பழகி விடுகிறார்கள். அரசாங்கமுகூட நீண்டகாலத் தேசிய நலன்களைப் புறக்கணித்து குறுகியகால அந்நியச் செலாவணி தேவைகட்காக இப் போக்கை ஊக்குவிக்கிறது. அந்நிய உள்ளாசப்பயணிகளை ஊக்குவிக்கும் முகமாக வீதிகளிலும் ஒய்முகைகளிலும் விடுதிகளும் வாடிவீடுகளுமாகப் பெருகி நாட்டை ஒரு புறம் சீரழிக்கவும் சீட்டிழுப்பை அப்பட்டமான சூதாட்டமாக்கி மக்களை சீரழிக்கவும் தணைபோகும் புல்லுருவிகளின் அரசாங்கம், சமுதாயம் முழுவதுமே சூதாடிகளும், விபசாரிகளும், தரகர்களும் எத்தர்களுமாகப் புல்லுருவிகளாகவே பெருகுவதை ஏன் தடுக்க வேண்டும்?

நூறு ரூபா நோட்டைக் காண்பதே அரிதாக இருந்த சூழலில் திடீரென்று பல ஆயிரக் கணக்கான ரூபாக்கள் பொழியும் போக அது சீட்டிழுப்பில் அதிர்ஷ்டவசமாக இலவசமாக வந்த பணம் போன்றே பலரால் கருதப்படுகிறது. இவ்வளவு சுலபமாகப் பணம் வரும்போது பாடுபடுவதற்கான உந்துதல் தேயவே செய்கிறது. எவ்வாறு பல அரசர் காலனித்துவ நாடுகளில் கிராமங்களும் நகரத்துக்கு மிடையிலுள்ள ஊதிய வேறுபாடுகள் ஏழைக் கிராம வாசிகளை வேலை தேடி நகரங்களை நோக்கித் தள்ளிச் சீரழித்தனவோ அதேபோன்று அயல்நாட்டு வேலை வாய்ப்புக்களே மக்களை நாட்டைவிட்டே விரட்டுகின்றன. ஆயினும் ஒரு முக்கிய வேறுபாடு இங்கு கவனிக்கத் தக்கது. முன்னைய சூழலில் நகர வாழ்க்கை எவ்வளவு அவலமான ஒன்றாலும்கூட அங்கு பழக்கப்பட்ட மனிதன் அங்கே எப்படியோ நீடிக்க முடிகிறது. சூழலின் நிர்ப்பந்தங்கள் அவனைச் சில சமயம் கிராமத்துக்குத் திருப்பி அனுப்பலாம், ஆனால் பெருமளவும் அவன் எப்படியோ நகரத்தில் பிழைத்துக் கிடக்கப் பழகிவிடுகிறான். பின்னைய சூழலில் பொருளாதார அரசியல் நெருக்கடிகள்(உகண்டா 1965, லெபனான் 1982, நைஜீரியா 1983 போன்று) எதிர்பாராத நேரங்களில் மனிதர்களைத் தொகை தொகையாக மீண்டும் தாய் நாட்டுக்கு விரட்டி விடுகின்றன. இதனால் ஏற்படும் கஷ்டங்களை திடீரென ஏற்படும் காரணத்தால் பல வகைகளிலும் மிகவும் உக்கிரமானவையாகி விடுகின்றன.

எவ்வாறு ஒட்டுண்ணி வாழ்க்கை (சூதாட்டம், திருட்டு, விபச்சாரம் போன்றவை) உழைப்பினின்றும் சமுதாய உணர்வினின்றும் மனிதனை ஒதுக்குகின்றதோ அவ்வாறே பெரும்பாலான சூழ் நிலைகளில் 'இலகுவாகச் சம்பாதிக்கப்பட்டதாகக் கருதப்படும் பணமும் மனிதனது சமுதாய நிலையையும் உணர்வையும் பாதிக்கின்றன. சமுதாயத்தின் அடிப்படையாக அமைந்துள்ள உழைப்பினின்றும் பிரிந்துநிற்கும் இந்த உழைப்புமுறை மனிதனை அவனது சமுதாயத்தின் வேர்களினின்று பிரித்து ஒதுக்குகிறது. சுருக்கமாகச் சொன்னால் உதிரிப் பாட்டாளி வர்க்கத்தின் மனப்பான்மை அவனுள்ளியல்பாகவே குடிகொள்ளுகிறது.

நீண்டகாலக் கண்ணோட்டத்தில், உலகப் பொருளாதார நெருக்கடி வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை அதிக காலம் நீடிக்க அனுமதிக்கப் போவதில்லை. அந்த நெருக்கடி திடீரென வந்து சூழும் என்ற அவசியம் இல்லை. சில சூழ் நிலைகளில், இப்போது கிடைப்பதிலும் கணிசமாகக் குறைந்த ஊதியத்துடன் திருப்தியடையும் நிர்ப்பந்தமும் ஏற்படலாம், அல்லது வேலைவாய்ப்புக்கள் மெல்லச் சுருங்கி சில திறமைகளையுடைய நபர்கட்கு மட்டும் கிடைக்கக் கூடியனவாகலாம். எவ்வாறுயினும் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை எந்த அரசாங்கமும் சமுதாயமும் ஒரு நீண்டகாலத் தீர்வாகக் கருத முடியாது. உண்மையில் 1973 க்குப்பிறகு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினின்று அரசாங்கத்துக்கும் மக்களின் ஒரு பகுதியினருக்கும் ஒரு தற்காலிக நிவாரணமாக வந்த இவ்வேலை வாய்ப்புக்கள் நீண்டகாலக் கண்ணோட்டத்தில் தேசிய நிர்மாணத்தையும், அரசியல் விடுதலையையும், பொருளாதார சுதந்திரத்தையும் சுபிட்சத்தையும் மிகவும் பாதகமாகவே பாதித்துள்ளன

யாரையுமே வெளிநாடு போக வேண்டாம் என்று மறிப்பதோ தடுப்பதோ எமது நோக்கமல்ல. ஒரு சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தால் பெருந்தொகையான வாலிபர்கட்கும், தொழிலாளர்கட்கும் பிற உழைப்பாளிகட்கும் வெளிநாடுபோவதுவே வழி என்று தென்படுவது முற்றுமுழுவதும் தவறும் அல்ல. சீரழிந்த ஒரு சமுதாயத்தில் எத்தனையோ பேர் ஒட்டுண்ணிகளாக வாழ நிர்ப்பந்திக்கப் படுகிறார்கள். பலருக்கு அது தவிர்க்க முடியாத வாழ்க்கைப் பாதையாகி விடுகிறது. நாம் இங்கேசெய்ய முயல்வதெல்லாம் இச் சூழலையும், இந்த நிலவரத்தையும் நம்முள்ளே சமுதாய உணர்வுள்ளவர்கள் சற்றே ஆழமாகப் புரிந்துகொள்ளத் தூண்டுவது மட்டுமே!

முடிவாக, சீனக் குட்டிக் கதையொன்று ஞாபகத்துக்கு வருகிறது. 'ஒரு விவசாயி ஒரு மரத்து நிழலில் ஓய்வெடுக்கும்போது திடீரென வேகமாக ஓடிவந்த முயலொன்று மரத்தில் மோதி விழுந்தது. அவன் அந்த முயலை எடுத்துச் சென்றான். அதன் பிறகு ஒவ்வொரு நாளும் மரத்தடியில் முயல் வரவுக்குக் காத்திருந்து சீரழிந்து போனான்.' நம்மில் கணிசமானோர் முயல் கட்குக் காத்திருக்கிறார்கள். நம் அரசாங்கமும் முயல்களுக்குக் காத்திருக்கும்படி உற்சாகமூட்டி வருகிறது. ★

செம்பதாகை

செய்திப் பத்திரிகையாக பதிவு பெற்றது

பல்கலைக்கழகங்களைக் கட்டுப்படுத்தி

மாணவர்களை நசுக்கத்திட்டம்

இந்த அரசு பதவிக்கு வருவதற்கு பல்கலைக்கழக மாணவர்களையும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றால் போல் பாவித்தது என்பது அறிந்ததொன்றே. ஐக்கியமுண்ணணி அரசின் இறுதிக்காலத்தில் வீரசூரிய என்ற மாணவன் பொலிஸ் துப்பாக்கிக்கு இரையாக்கப்பட்டபோது யூ. என். பி. தலைவர்கள் வடித்த நீலிக்கண்ணீருக்கு அளவே இல்லை. அன்று பல்கலைக்கழக மாணவர்களுக்காக கண்ணீர் விட்டவர்களின் இன்றைய ஆட்சியில், பல்கலைக்கழக மாணவர்களின் நிலை நாளாந்தம் மோசமடைந்து செல்கிறது. இந்த அரசிடம் தார்மீகத்தை எதிர்பார்த்து அரசுசார்பு மாணவர் சங்கங்களை உருவாக்கிய மாணவர்களும் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் இன்று அதே மாணவர்களே அரசுக்கு எதிராக போர்க்கொடி தூக்கும் நிலைக்கும் வந்துள்ளனர்.

நாட்டில் இன்று ஆறு பல்கலைக்கழகங்களும் இரண்டு பல்கலைக்கழக கல்லூரிகளும், உள்ளன. பல்கலைக்கழகங்களைச் சுதந்திரமாக (உண்மையில் அரசின் கையாட்களே நிர்வாகத்தில் இருக்கிறார்கள்) இயங்க வைப்பதே அரசின் கொள்கை என்று கூறிய அதே ஆட்சியினர் இன்று பல்கலைக்கழகங்களை நேரடியாகக் கட்டுப்படுத்தும் சட்டவிதிகளைக் கொண்டுவர முடிவு செய்துள்ளார்கள். தமக்கு தலையிடி கொடுக்காத வரையில் எந்த நிறுவனத்துக்கும் 'சுதந்திரம்' 'ஜனநாயகம்' உண்டு. ஆனால் கோரிக்கைகளும் கொள்கைகளும் வைத்து, உரிமை நியாயம் கேட்க புறப்பட்ட மறுகணம் சகல 'சுதந்திர-ஜனநாயக' கோஷங்களும் தூக்கி வீசப்பட்டு, நேரடிக் கட்டுப்பாடும், அடக்கு முறைகளும் அவிழ்த்து விடப்படும். தற்போதைய தார்மீக யூ. என். பி.-ஜே,ஆர். ஆட்சி பாராளுமன்ற விடயங்கள் தொட்டு பல்கலைக்கழக விடயங்கள் வரை கையாளும் சுதந்திர சர்வாதிகாரக் கொள்கை இதுவேயாகும். இதுவே பாசிசர்வாதிகார நடைமுறை என்று கூறப்படுவதாகும்.

ஆறு பல்கலைக்கழகங்களிலும் மாணவர்கள் அமைதியாகவுள்ள ஒரு பல்கலைக்கழகத்தை இன்று ஆட்சியினரால் காட்டமுடியாது. ஆட்சிக்கு வந்த அண்மித்த ஆண்டிலேயே களனிப் பல்கலைக்கழக மாணவர்கள் தமது கோரிக்கைகளை வைத்த போது யூ.என்.பி. குண்டர்கள் மூலம் தாக்கப்பட்டனர். மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் சில மாணவர்கள் இடைநிறுத்தம் செய்யப்பட்டனர். இன்றும் பணம் செலுத்தி பொறியியல் துறைக்கு வெளியாரை அனுமதிக்கும் முறைக்கு அங்கு மாணவர்கள் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் மாணவர்கள் மத்தியிலேயே அரசு சார்பினர் பிரச்சினைகளை கிழப்பி மாணவர்களையும் மாணவர்களை மோதவிட்டனர். யாழ்-பல்கலைக்கழகத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கக் கோரி தடுத்து வைக்கப்பட்ட தமது சக மாணவர்களையும் விடுவிக்கும்படியும் ஊர்வலம் உண்ணாவிரதம் பகிஷ்கரிப்பு போன்ற பலமான நடவடிக்கைகளை அரசுக்கு எதிராக மாணவர்கள் நடாத்திவருகின்றனர். கொழும்பு பல்கலைக்கழகத்தில் வெளியார் திணிக்கப்படுவதையும் கல்வி வெள்ளையறிக்கையை எதிர்த்தும் வேறு கோரிக்கைகளை வைத்தும் பகிஷ்கரிப்புகள் இடம் பெற்றன. அன்மையில் சகல பல்கலைக்கழகங்களும் இணைந்து ஒரு நாள் பகிஷ்கரிப்பில் இறங்கின.

இவற்றால் கிலிகொண்ட அரசு பல்கலைக் கழகங்களின் மாணவர் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க சட்டங்களின் துணையை நாடுகிறது. ஆனால் மாணவர்களின் அதிருப்தியையும், எதிர்ப்பையும் சட்டங்களால் நசுக்கிவிட முடியாது. இலவசக் கல்வியை முற்று முழுதாக சீர் குலைத்து பல்கலைக்கழகங்கள் உயர்வர்க்ககுடும்பத்தினருக்கு மட்டுமே என்ற பழைய நடைமுறையைக் கொண்டு வருவதே யூ. என்.பி.யின் நீண்டகால இலக்காகும். இதை அடைவதற்கு பல்கலைக்கழக நடைமுறைகளை மாற்றி அமைப்பது அவசியம் என்பதாலேயே பல்கலைக்கழகங்களைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை அரசு கொண்டுவர முடிவு செய்துள்ளது.

நாட்டின் சகல துறைகளும் யூ. என். பி. யின் பெருமுதலாளித்துவ வர்க்க நோக்கிற்காக சீரழித்து சின்னாபின்னப்படுத்தப்படும் இவ்வேளை பல்கலைக்கழகத்தின் மீதும் கை வைக்கப்படுவது புதுமையான தொன்றல்லால் பல்கலைக்கழக மாணவர்கள் இந்நிலையினை எதிர்க்க தனியே மாணவர்களாக மட்டுமன்றி நாட்டு மக்கள் அனைவருடனும் ஒன்றிணைந்து போராட்ட இயக்கங்களை முன்னெடுக்க தயாராக வேண்டும்.

இந்திராவை உலுக்கும்

அசாம் கலவரங்கள்

இந்தியாவின் அஸ்ஸாம் மாநிலத்தில் 1960-களிலிருந்தே வேற்று மாநிலத்தவர் குடியேறியதால் அங்கு துவேஷ உணர்வுகள் தலைநீட்டத் தொடங்கிவிட்டன. முக்கியமாக மேற்கு வங்காள மாநிலத்தவர்கள் அங்கு வேலை தேடிச் சென்றனர். அஸ்ஸாமில் எண்ணை வளம் அங்கு வேலைவாய்ப்புக்களை அதிகரித்தது. (கிழக்கு வங்காள) வங்காள தேசப் பிரச்சனையை யொட்டி 1971-ல் இந்திரா காந்தி அங்கு குறுகிய அரசியல் லாபத்துக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் பல கிழக்கு வங்காள முஸ்லிம்களை இந்தியா உண்மையில் தம் புகலிடம் என்று நம்பவைத்தன. வரட்சி, வெள்ளம் புயல் என்றெல்லாம் பிரச்சனைகள் ஏற்பட்ட சமயம் வங்காள தேச அகதிகள் அஸ்ஸாமில் குடியேற ஆரம்பித்தனர். இந்திரா அரசாங்கமோ, தேசாய் அரசாங்கமோ அதுபற்றி அதிகம் கவனிக்கவில்லை. இன்று பொருளாதார நெருக்கடியின் அதிகரிப்பில் தம் மாநிலத்தில் தாங்கள் பின்தங்கியவர்களாக இருக்கும் நிலையில் தம்மைக் கருதும் அஸ்ஸாமிய மத்தியதர வகுப்பினர் பல்கலைக்கழக மாணர்கள் போன்றோர் மத்தியில் வங்காளி இன விரோத உணர்வுகளைத் தூபமிட்டு வளர்க்க இலகுவாயிற்று.

தனக்கு அஸ்லாமில் உள்ள அரசியல் வசதிகளை முன்னிட்டு அஸ்ஸாமிய மக்களது நியாயமான அச்சங்களை இந்திரா அரசு அசட்டை செய்தது. மறுபுறம் ஜனதாபோன்ற வலதுசாரிகள் முழுஇந்தியாவுக்கும் தேசிய ஐக்கியம் போதித்துக்கொண்டு பிரதேச வாதத்தை எதிர்க்கும் அதே சமயம் அஸ்லாமில் வங்காளி கட்கு (முக்கியமாக முஸ்லிம்களுக்கு) விரோதமான உணர்வுகளைத் தூண்டுவோரை ஆதரிக்கிறார்கள் இந்திய மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (அதன் சந்தர்ப்பவாத பாராளுமன்ற அரசியல் ஒருபுறம் இருக்க) இவ் விஷயத்தில் ஓரளவு நிதானமான நியாயமான தீர்வை வலியுறுத்தி வருகிறது அஸ்லாமிய மக்களது நியாயமான அச்சங்கட்கும் குறைபாடுகட்கும் வழிதேடுவது ஆனால் தீர்வுகள் மனிதாபிமானமற்ற முறைவில் இன விரோத உணர்வுகட்குத் தனி போடுவதாக அமைவது வெறுக்கத்தக்கது.

இனவாதமும், பிரதேச வெறியும் மனித சமுதாயத்தில் ஏற்படுத்தும் சீரழிவுக்கும் கேடுகட்கும் அஸ்லாம் பரிதாபகரமான உதாரணமாகநிற்கிறது. அஸ்ஸாம் சம்பவங்கள் முதலாளித்துவ, பிற்போக்கு அரசியல் கட்சிகள் எவ்வாறு நிலவரங்களைத் தம் குறுகிய கால அரசியல் நலன்கட்குப் பயன் படுத்தி ஆறும் புண்ணை மேலும் ஆழமாகத் தோண்டி விடுகின்றன என விளக்குகின்றன.

5-ம் பக்கத்தொடர் ...

சகஜமான விடயம். எனினும் அல்டோரி தோட்டச் சம்பவம் கொஞ்சமேனும் மனிதத் தன்மை அற்ற விடயமாகும். இதிலிருந்து பலபாடங்களை தோட்டத் தொழிலாளர்கள் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. உரிமைப் போராட்டங்களை முறியடிக்க 'தோட்டத் துரைமாரே' முன்வந்து தொழிலாளர்களை கொலை செய்யுமளவிற்கு, தோட்டத்தொழிலாளர்களின் நிலை படுமோசமாக மதிக்கப்படுகின்றதேயன்றி வேறொன்றுமில்லை. யூ. என்.பி. ஆட்சி அதிகாரத்திலுள்ளவர்கட்கு கொலைசெய்யவும் இடம்கொடுத்துள்ளது படுகேவலமானதுடன், அது வெறுக்கக்கூடியதுமாகும்.

எனவே கௌரவ தொண்டமான் அரசுடன் இருந்தாலும், கூடவே கௌரவ செல்லச்சாமி சேர்ந்தாலும் தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளை போராட்டக் களத்திலேயே பெறமுடியும் என்பது தவிர்க்க முடியாததாகும். அவர்களால் கொடுக்கப்படும் வாய் உறுதிகள் வெறும் ''ஏட்டுச்சீனியே'' ஆகும் என்பதை சகல மக்களும் மறக்கமாட்டார்கள்.

தோட்டத் தொழிலாளர்களின் உரிமைப்போராட்டத்திலீடுபட்டுள்ள தோட்டத் தொழிலாளர்களும் அக்கறையுள்ள இயக்கங்களும் அனுதாபிகளும் ஐக்கியப்பட்டுப் போராடி வெற்றி காண்போமாக.

அன்று கிவனு லட்சுமணன், இன்று அல்டோரித் தோட்டத்து ராஜஜெயமணி. நாளை இவ்வாறான நிலை ஏற்படாதிருக்க ஓரணி திரள்வோம்.

அல்டோரித் தோட்ட போராட்டம் வெல்க! அனைத்துத் தோட்ட தொழிலாளர்களின் போராட்டம் வெற்றி பெற நாமும் போராடுவோம்.

மலையக ஆசிரியர்நியமனத்தில்

மீண்டும் குளறுபடி

இன்றைய பாஸிச சர்வாதிகார அரசின் ஒவ்வொரு செயலும் பாமர மக்கள் வயிற்றில் அடிக்கும் செயலாகத்தான் இருந்து வருகின்றது '402 மலையக ஆசிரியர் நியமனத்திலும் அவர்கள் தங்கள் திறமையைக் காட்டத் தவறவில்லை.

அரசாங்கம் தனது தேர்தல் திருவிழாக்களையெல்லாம் நடாத்தி முடித்துவிட்டு, மீண்டும் ஒரு நேர்முகப் பரீட்சையை கடந்த மாத நடுப்பகுதியில் தொகுதி, தொகுதியாக மலையகத்தின் வெவ்வேறு மாவட்டங்களில், வெவ்வேறு திகதிகளில் நடாத்தி முடித்தது. உண்மையில் மலையக படித்த இளைஞர் யுவதிகளுக்கென வழங்கப்படவிருந்த இந்த '402' ஆசிரிய நியமனங்களில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் சுமார் 160 பேர் தவிர்ந்த ஏனையோர் மலையகம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களைச் சார்ந்தவர்கள் என செய்திகள் வாயிலாக அறியக்கிடக்கிறது.

402 ஆசிரியர் நியமனத்திலாவது தங்களுக்கு விடிவு வராதா எனக் காத்திருந்த படித்த மலையக இளைஞர் யுவதிகளுக்கின் வாயில் மண்ணை அள்ளிப்போடும் இந்தத் திட்டமிட்ட செயல் அவர்களை பெருத்த ஏமாற்றத்துக்குள்ளாக்கியுள்ளது.

உண்மையில் போதிய தகமை இருந்ததும் அவர்கள் புறக்கணுக்கப்பட்டு மலையகம் தவிர்ந்த ஏனைய பிரதேசத்தவர்களும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருப்பது அரசாங்கத்தின் தாராள குணத்தைக் காட்டவில்லை. அவர்களின் குறுகிய அரசியல் இலாபத்தை அது காட்டுகிறது.

இந்த குளறுபடியை தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட சில பிற்போக்கு அரசியல் சக்திகள் பிரதேச வாதத்தைக் கக்கித் திரிகின்றன வீணான பிரதேச வாதத்தின் வழி நின்றோ, கண்மூடித்தனமான கோஷங்களின் கீழோ அணி திரளாமல் நேர்மையான வழியில் போராடி எமது பிரதேச உரிமையை நிலைநாட்ட முற்பட வேண்டும்,

எனவே இந்த திட்டமிட்ட புறக்கணிப்பு உடனடியாகத் தடுத்து நிறுத்தப்பட்டு 402 ஆசிரியர் நியமனங்களும் மலையகத்தைச் சேர்ந்தவர்களுக்கே வழங்கப்பட வேண்டும் என நியாயமான வழியில் உயர்ந்த தேசிய ரீதியிலான போராட்டம் ஒன்றை முன்னெடுக்க மலையக மக்கள் மட்டுமன்றி, சகல முற்போக்கு தேசபக்த ஜனநாயக சக்திகளும் ஒன்று திரண்டு முன்வர வேண்டும்.

அட்டன் நகரில் அஞ்சலிக் கூட்டம்

தமிழ் இலக்கியத்துறையில் தனிமனிதத் காக்குதல்களும், குரோத உணர்வுகளும் விமர்சனமாகக் கொள்ளப்பட்டு வந்த தவறான போக்கை முறியடித்து, இலக்கியத்தை வரலாற்று அடிப்படையிலும், சமூகவியல், நோக்கிலும், மாக்சிச அடிப்படையிலும் விமர்சனம்செய்து விமர்சனத் துறைக்கு முன்னோடியாக இலங்கையிலும் இந்தியாவில் திகழ்ந்தவர் பேராசிரியர் கைலாசபதியாவார்.

இவ்வாறு அட்டன் செட்டிக் மண்டபத்தில் தேசிய கலை இலக்கியப் பேரவையின் மலையகக் கமிட்டி நடாத்திய கைலாசபதியின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய பேராசிரியர் சி. சிவசேகரம் கூறினார். வி.விஜயன் தலைமையில் நடைபெற்றமேற்படி கூட்டத்தில் இ. தம்பையா பேசுகையில், அமரர் கைலாசபதி மலையகத்திலிருந்து தரமான இலக்கியப் படைப்பாளிகள் உருவாக வேண்டும் என்பதில் எப்பொழுதும் ஆர்வம் காட்டினார். மலையகத்தின் பிரபலமான எழுத்தாளர் சி. வி. வேலுப்பிள்ளையையும் அவரது எழுத்துக்களையும் மதித்துவந்த கைலாஸ் சி. வி. யைப் போல் பலர் மலையகத்தில் உருவாக வேண்டும் என்று விரும்பினார். இது அவரது விசாலமான பார்வையின் வெளிப்பாடாகும்.

மேலும் இக் கூட்டத்தில் கே. செந்திவேல், என். இராஜேந்திரன், என். இரவீந்திரன். எம்.பத்மநான், க.நடனசபாபதி ஆகியோரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

அச்சுப்பதிப்பு; யாழ்ப்பாண அச்சகம், 407, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். வெளியீடு; சி. நவரத்தினம் 15/1 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம்